

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன்அவர்கள், மாவட்ட கணிப்பாய்வு அலுவலர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன்,இ.ஆ.ப.,அவர்கள் ஆகியோர் குடும்ப அட்டைதரகர்களுக்கு விலையில்லாவேட்டி,சேலைகளை வழங்கி தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ,ப., அவர்கள், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு மாரியப்பன்கென்னடி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ உள்ளனர்

செ.வெ.எண்:20/2017 நாள்:07.01.2017

## சிவகங்கை மாவட்டம்

**மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன்அவர்கள், மாவட்ட கணிப்பாய்வு அலுவலர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன்,இ.ஆ.ப.,அவர்கள் ஆகியோர் தலைமையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம், பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன்அவர்கள், மாவட்ட கணிப்பாய்வு அலுவலர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன்,இ.ஆ.ப.,அவர்கள் ஆகியோர் தலைமையிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ,ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துறை வாரியாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்தார். அதன் பின்னர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் சிவகங்கை வட்டம் சுந்தரநடப்பு, இளையான்குடி வட்டம் நாகமுகுந்தன்குடி, மானாமதுரை வட்டம் முத்துராமலிங்கபுரம், காளையார்கோவில் வட்டம் புளியங்குளம், நெடுங்குளம், தேவகோட்டை வட்டம் அண்டகுடி, கற்களத்தூர், நெடோடை, கருங்குழி, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மினாப்பூர்,பாப்பாகுடி, சாக்கோட்டை ஒன்றியம் மித்ராவயல், திருப்பத்தூர் வட்டம் நெடுமரம், தட்டட்டி, சிங்கம்புணரி ஒன்றியம் மாத்தூர் ஆகிய பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களை பார்வையிட்டு விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்து அவர்களது கோரிக்கைகளை அரசுக்கு பரிந்துரை செய்து விரைவில் உரிய உதவிகள் கிடைக்க ஆவன செய்யபடும் என தெரிவித்தனார்.

இந்த ஆய்வின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பிஆர்.செந்தில்நாதன், மானாமதுரை சட்ட மன்ற உறுப்பினர் திரு.மாரியப்பன்கென்னடி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, தேவகோட்டை சார் ஆட்சியர் மரு.ஆல்பிஜான்வர்க்கிஸ்,இ.ஆ.ப., சிவகங்கை கோட்டாட்சியர் திரு.அரவிந்தன் மற்றும் வட்டாட்சியர்கள், துறைச் சார்ந்த அலுவலர்கள் உடன் சென்றனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.